## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 16–ஆம் நாள் புதன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆனித் திங்கள் 32–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.184/2018 –ல்**

**வழக்கிடை விண்ணப்ப எண்.350/2018–ல்**

**இடைநிலை மனு எண்.3/2024**

**1.K.பிரசாந்த்**
**2.K.ஶ்ரீ நிதிஸ்**
**3.M.குலசேகரன்** ... **மனுதாரர்/3–ஆம் தரப்பினர்.**

**–எதிர்–**

**K.பாலசுப்ரமணியன்** ... **எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி.**

**K.கிருபாகரன்** ... **எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி.**

இந்த மனு 02.07.2025-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு. N. சுரேஷ்** அவர்களும் 1 ஆம் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு. G. நரசிம்மன்** அவர்களும் 2 ஆம் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு. N. மெய்க்கண்டமூர்த்தி** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

தீர்ப்புக்குமுன் வழக்கிடை விண்ணப்ப எண்.350/2018-மூலம் அந்த மனுவில் கண்டுள்ள சொத்தை பற்றுகை செய்ததை இரத்துச் செய்யக் கோரி

உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் **38**-ஆம் வகுமுறையின் **08**-ஆம் விதியின்கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. மனுதாரர்கள் இந்த வழக்கு நடவடிக்கையில் சம்மந்தப்படாத 03 ஆம் தரப்பினர் ஆவார்கள். 01-ஆம் மனுதாரர் தனக்காகவும் 02, 03-ஆம் மனுதாரர்களுக்காகவும் இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறார்.

02. 01-ஆம் எதிர்மனுதாரர் முதலேற்பு வழக்கில் வாதி ஆவார். 02-ஆம் எதிர்மனுதாரர் முதலேற்பு வழக்கில் பிரதிவாதி ஆவார். 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதி 02-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிமீது முதலேற்பு வழக்கு எண்.184/2018 வழக்கை தொடுத்து அதில் தீர்ப்புக்குமுன் பற்றுகை செய்யக் கோரும் வழக்கிடை மனு எண்.350/2018-யை தாக்கல்செய்து அந்த மனுவில் கண்டுள்ள சொத்தை நீதிமன்றம் மூலம் பற்றுகை செய்துள்ளார். அவ்வாறு பற்றுகைச் செய்யப்பட்டச் சொத்து 02-ஆம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு சொந்தமான சொத்து இல்லை.

03. வழக்கிடை விண்ணப்ப எண்.350/2018-மூலம் பற்றுகை செய்யப் பட்டச் சொத்து ஆதியில் மார்கண்டன் என்பவருக்கு சொந்தமாக இருந்தது. மார்கண்டனின் மகன் குலசேகரன் ஆவார். குலசேகரனின் மகன் 02-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கிருபாகரன் ஆவார். கிருபாகரன் மகன்கள்தான் இந்த மனுவின் மனுதாரர்கள் ஆவர்.

04. மனுதாரர்களின் தகப்பனார் கிருபாகரன் ஊதாரித்தனமாக செலவு செய்து கொண்டு கடன் வாங்கி பிரச்சனைக்கு ஆளாகி வந்தார். அவர்

மார்கண்டனின் சொத்தை வில்லங்கத்திற்கு உட்படுத்த முயன்றார். அதனால் மார்கண்டன் 21.10.2003-ஆம் தேதியன்று ஒரு பாகப் பிரிவின் பத்திரத்தை ஏற்படுத்தினார். அதில் "A" அட்டவணை சொத்து மார்கண்டனின் வாழ்நாளுக்கு பிறகு குலசேகரனும் குலசேகரனின் வாழ்நாளுக்குப் பிறகு மனுதாரர்களும் அடைய வேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது. குலசேகரனுக்கு 1,00,000/- உரூபாய் மட்டும் பாகப்பிரிவினையில் கொடுக்கப்பட்டது.

05. 21.10.2003-ஆம் தேதியிட்டப் பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள "A"அட்டவணை சொத்துதான் வழக்கிடை விண்ணப்ப எண். 350/2018 நடவடிக்கையில் பற்றுகை செய்யப்பட்டச் சொத்தாகும். அந்தச் சொத்துமீது 02-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதி அந்தச் சொத்தை பற்றுகை செய்ய முடியாது. ஆகையால், வழக்கிடை விண்ணப்ப எண். 350/2018 மூலம் அந்த மனுவில் கண்டுள்ள சொத்து பற்றுகை செய்து ஆணையிட்டிருப்பதை நீக்கரவுசெய்து ஆணையிட வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

**(i) 01–ஆம் எதிர்மனுதாரர்/வாதியின் எதிருரையின் சுருக்கம்:**

06. மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய். 21.10.2003-ஆம் தேதியிட்டப் பாகப்பிரிவினை பத்திரத்தின் வாசகங்களை பார்த்தால் 02-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு கடன் கொடுத்தவர்களை ஏமாற்றும் நோக்கத்துடன் எழுதப்பட்டிருப்பது தெளிவாக தெரியும். வழக்கிடை விண்ணப்ப எண்.350/2018-ல் பற்றுகை ஆணை

பிறப்பிக்கப்பட்டு இறுதியாகிவிட்டது. 02-ஆம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக சேலம் 03-ஆம் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.129/2018 நிலுவையில் உள்ளது. இந்த வழக்கில் வழக்கு விசாரணை தொடங்கிய பிறகு வழக்கிடை விண்ணப்ப எண்.350/2018-ல் இறுதி ஆணை பிறப்பிக்கப் பட்டு சுமார் 04 ஆண்டுகளுக்கு பிறகு 02-ஆம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதியின் தூண்டுதலின்பேரில் மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதியை ஏமாற்றும் நோக்கத்துடன் மனுதாரர்களும் 02-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியும் கூட்டுச் சதியுடன் செயல்படுகின்றன. ஆகையால், இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**(ii) 02–ஆம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்:**

07. மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை. மனுச் சொத்தில் 02-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு உரிமை இல்லை என்று சொல்லியுள்ளது பொய். வழக்கிடை விண்ணப்ப எண்.350/2018-மூலம் பற்றுகை செய்யப்பட்டச் சொத்தின்மீதான பற்றுகையை நீக்கரவு செய்யக் கோரிவது ஏற்புடையதல்ல. ஆகையால், தகுந்த ஆணை பிறப்பிக்க வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

08. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?

**தீர்முடிவு**

09. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. 21.10.2003-ஆம் தேதியிட்டப் பாகப்பிரிவினை பத்திரம் பற்றியும் அதில் வழக்கிடை விண்ணப்ப எண்.350/2018-மூலம் பற்றுகை செய்யப்பட்ட சொத்து மனுதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்ற சங்கதியையும் அச்சொத்துமீது 02-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு உரிமை இல்லை என்ற சங்கதியையும் 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதி மறுக்கவில்லை.

10. 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதி உட்பட 02-ஆம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு கடன் கொடுத்தவர்களை ஏமாற்றும் நோக்கத்தோடு 21.10.2003-ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்று 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வாதிட்டனர். வழக்குரைபடி 01.02.2015-ஆம் தேதியன்றுதான் 02-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு 13,00,000/- ரூபாய் கடன் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது. இந்த வழக்கு 2018-ஆம் ஆண்டு தாக்கல் செய்யப் பட்டிருக்கிறது. மனுதாரர்கள் சொல்லும் பாகப்பிரிவினை வழக்குக் கடன் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் நாளுக்கு 10 ஆண்டுகளுக்குமுன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால், 01-ஆம் எதிர்மனுதாரர்/ வாதியின் கடனை ஏமாற்றும் நோக்கத்தில் அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டதாக சொல்ல முடியாது.

11. வழக்கிடை விண்ணப்ப எண்.350/2018 மூலம் பற்றுகை செய்யப்பட்ட சொத்தில் 02-ஆம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எவ்வித

உரிமையும் இல்லாத நிலையிலும் மனுதாரர்கள்/03-ஆம் தரப்பினர்களுக்கு -தான் உரிமை உள்ளது என்ற நிலையிலும் வழக்கிடை விண்ணப்ப எண். 350/2018-ல் பிறப்பிக்கப்பட்ட பற்றுகை உத்தரவை இரத்துச் செய்வதே சரியானது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதிமுடிவு**

12. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 16–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

உண்மை/வரைவு ஆணையுரை
இ.ம.எண்.03/2024 in
வ.வி.எண்.350/2018 in
மு.வ.எண்.184/2018
நாள் 16.07.2025